முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 63/2022

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரமானந்தம் | தொழில் | : போதகர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ஆபேல் | கிராமம் | : தொட்டிபாளையம் |
| வயது | : 62 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 11-09-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா வழக்குரையும், முதல் விசாரணை வாக்குமூலமும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவாச் சொத்து South India Assembly of God சபைக்காக 22.07.1962 ம் தேதி வாங்கியதாக தாவா பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தின் கிரயப் பத்திரத்தின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) என் தந்தை தாவாச் சொத்தில் உள்ள South India Assembly of God சபையில் மத போதகராக இருந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா பிராது பத்தி 7 ல் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடு மாவட்ட கவுன்சல் South India Assembly of God என்பது உள்ளதா என்பதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன விவரங்கள் எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) தாவாச் சொத்திலுள்ள South India Assembly of God சபையில் பணியாற்றுவதற்கு முன்பு சத்தியமங்கலத்தில் பணியாற்றினேன் என்றால் சரிதான். என் தகப்பனார் அனுப்பினார். எத்தனை வருடங்கள் என்றால் சில வருடங்கள் பணியாற்றினேன். சத்தியமங்கலத்தில் உள்ள சபையின் பெயர் என்ன என்றால் Assembly of God ஆகும்.

தமிழ்நாடு மாவட்ட கவுன்சல் இருந்து எனக்கு கடிதம் எதுவும் வந்ததா என்றால் இல்லை. 11.03.2022 ம் தேதி Tamil Nadu Assembly of God சபையில் இருந்து என்னை நிரந்தரமாக நீக்கிவிட்டதாக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.29/2025 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த வழக்கின் பிராது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.2** அக குறியீடு செய்யப்படுகிறது.

4) பி.வா.சா.ஆ.2 அ.வ.எண்.29/2025 வழக்கின் பிராதில் பத்தி 7 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களை சாட்சி மறுக்கிறார். இந்த வழக்கின் பிராதில் Long cause title –ல் 1 முதல் 5 பிரதிவாதிகள் Tamil Nadu District Counsel of Assembly of God என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 7 முதல் 12 பிரதிவாதிகள் தாவாச் சொத்திலுள்ள திருச்சபைக்கு எப்படி தொடர்பு உடையவர்கள் என்று தாவா பிராதில் சொல்லி உள்ளேனா என்றால் அவர்கள் சபையின் விசுவாசிகள் (Believers) ஆவார்கள்.

5) தாவா பிராது பத்தி 13 ல் சொல்லி உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவாச் சொத்தில் உள்ள திருச்சபைக்கு ஆனந்த் அலெக்சாண்டர் என்பவரை போதகராக நியமனம் செய்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனந்த் அலெக்சாண்டர் என்பவரை தாவாவில் ஏன் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் அவர் மாவட்ட ஆட்சியரிடம் சென்று மனு கொடுத்தார். என்ன மனு கொடுத்தார் என்றால் மனு கொடுத்தார் நான் அந்த இடத்தில் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.09.11 17:34:24 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.